இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 05
இரண்டாம் மதிப்பீட்டு பரீட்சை – 2007/2008
LWU 3314/4334 – சுற்றாடல் சட்டம்.
காலம்: 40 நிமிடம்

திகதி: 14.12.2007

நேரம்: மு.ப. 10.00 – மு.ப 10.40

ஒரு வினாவுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "சூழலுக்கு எதிர்மறையான விளைவினை ஏற்படுத்தக்கூடிய செயற்திட் நடவடிக்கைகளுக்கு சூழல் தாக்க மதிப்பீடு ஓர் தேசியக் கருவியாக செயற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் இவை தகைமையுடைய தேசிய அதிகாரசபைக்குரி தீர்மானங்களாக இருத்தல்வேண்டும்."

(ரியோ பிரகடனம் (1992) – கொள்கை 17)

இலங்கையில் சூழல் தாக்க மதிப்பீடு எந்தளவு தூரத்திற்கு ஓர் கருவியாக எடுத்தாளப்படுகின்றது என்பதனை நுணுக்கமாக விளக்குக.

2. கிரினிடா நாட்டில் உள்ள எக்ஸ்ட்ரா மற்றும் வீட்டா என்பன உய வர்த்தகமயப்படுத்தப்பட்ட நகரங்களாகும். இவ்விரு நகரங்களுக்குமிடையிலான தூரம் 6( கி.மீ ஆகும். இவ்விரு நகரங்களை இணைக்கும் வகையில் ஓர் பெருந்தெருவினை அமைக்க கிரினிடா நாட்டின் பெருந்தெருக்கள் அமைச்சு உத்தேசித்தது. ஜாவா எனும் நாடு இத்திட்டத்தினை அமுல்படுத்த நிதிவசதியளிக்க உடன்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட பெருந்தெருச்செயற்திட்டத்தின் கீழ் உள்ள பிரதேசத்தில் பெருந்தொகையான மக்கள் வசிக்கின்றனர். இச்செயற்திட்டத்திற்கான சூழல் தாக்க மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த பிரதேசத்தில் வசிப்பவரான திரு.பீட்டர் என்பவர் தெலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றினை அவதானித்தபோது 1 மாத காலப்பகுதியில் குறித்ததிட்டம் அமுலுக்கு வரப்போகின்றது என அறிகின்றார். குறித்த பெருந்தெருச்செயற்திட்டமானது தமது பிரதேசத்தினைப் பாதிக்கப்போகின்றது என்பதனை தெரிந்துகொண்ட திரு.பீட்டர் இயலுமான சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக உம்மிடம் சட்ட ஆலோசனை கோருகின்றார்.

கிரினிடா நாட்டின் சட்டமானது இலங்கை சட்டத்திற்கு ஒப்பானது எனக்கருதிக்கொண்டு திரு.பீட்டருக்கு ஆலோசனை வழங்குக.

(பதிப்புரிமை பெற்றது)